Asylum Support Partnership
help and advice

September 2012 Tamil

# அடைக்கல ஆதரவிற்கு விண்ணப்பம் செய்தல்

அடைக்கலம் நாடும் மக்கள் முதன்மை நலவாழ்வு நன்மைகளைக் கோருவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அடைக்கலம் நாடுபவர்களில் பெரும்பாலோனோர் பணி செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. விதிவிலக்காக சில நேரங்களில் நீங்கள் பணி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும், இது குறித்து நீங்கள் ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும்.

அடைக்கலம் நல்கும் நடைமுறைகள் விரிவானதாக இருப்பதால், உங்களை நீங்கள் பராமரித்துக் கொள்வது குறித்து நீங்கள் முடிவு செய்துகொள்ள வேண்டியிருக்கலாம். யூகே எல்லை முகமையின் (UK Border Agency - UKBA) உதவி பெறுவதற்கு நீங்கள் தகுதிபெறக்கூடும். UKBA என்பது, ஏழ்மை நிலையிலுள்ள அடைக்கலம் நாடுபவர்களுக்கு ஆதரவளிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ள ஓர் அரசுத் துறையாகும். UKBA-ஆல் தங்குமிட வசதி தவிர, உணவு மற்றும் உடைகளுக்காக பண உதவியையும் அளிக்க முடியும். தங்குமிட வசதி உங்களுக்கு இருப்பின், உதாரணமாக, நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் நீங்கள் தங்கியிருந்தால், நீங்கள் பண உதவிக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம். பண உதவி, 'பிழைப்புத்தொகை உதவி' என்றும் அழைக்கப்படுகிறது.

உங்களை பராமரித்துக் கொள்வதற்கு உங்களால் இயலவில்லையெனில், உங்களுடைய அடைக்கலக் கோரல் செயல்முறைப்படுத்தப்படும் வேளையில் எந்த நேரத்திலும் நீங்கள் அடைக்கல ஆதரவிற்கு விண்ணப்பிக்கலாம். உங்களுக்குத் தேவைப்பட்டால், நீங்கள் அடைக்கலத்திற்காக விண்ணப்பிக்கும் அதே வேளையில் நீங்கள் ஆதரவளிப்பதற்காகவும் கேட்டுக்கொள்ள முடியும். அதன் பிறகு உங்களுக்கு தற்காலிக தங்குமிட வசதியை UKBA ஏற்பாடு செய்ய வேண்டும்.

**18 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்:** நீங்கள் UKBA மற்றும்/அல்லது சமூக சேவையால் 18 வயதுக்குட்பட்டவராக ஏற்கப்பட்டிருந்தால், மற்றும் நீங்கள் சுயமாக அடைக்கலத்திற்கு விண்ணப்பிப்பவராக இருந்தால், உங்கள் உள்ளூர் அதிகாரியிடமிருந்து உங்களுக்கு உதவி கிடைக்கும்.



Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: PO Box 68614, London E15 9DQ United Kingdom, VAT reg no: 936 519 988

## யாருக்கு UKBA விடமிருந்து உதவி பெறுவதற்கு தகுதி உண்டு?

உங்களுக்கு தங்குமிட வசதி மற்றும் பண உதவி ஆகிய இரண்டுமே தேவைப்படலாம், அல்லது உங்களுக்கு பண உதவி மட்டும் தேவைப்படக்கூடும். இதில் எதுவாக இருப்பினும், நீங்கள் UKBA க்கு பல விஷயங்களை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்:

- அதாவது உங்களுடைய அடைக்கலத்திற்கான விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் உங்கள் விண்ணப்பம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்பதை
- நீங்கள் ஏழ்மை நிலையில் இருப்பதை (அதாவது உங்களிடம் மிகக் குறைந்த அளவில் பணம் இருப்பது அல்லது பணம் மற்றும் தங்குமிட வசதி இல்லாத நிலை)
- யூகேக்கு வந்தபின், 'இயன்றவரை நியாயமான அளவிற்கு விரைவாக' நீங்கள் அடைக்கலத்திற்கு விண்ணப்பித்திருப்பது.
- நீங்கள் 18 வயதிற்கும் அதிகமானவராக இருப்பது.

## 'இயன்றவரை நியாயமான அளவிற்கு விரைவாக' என்பதன் பொருள் என்ன?

இச்சோதனை, தங்குமிட வசதி மற்றும் பண உதவி ஆகிய இரண்டிற்குமே விண்ணப்பிக்கும் நபர்களுக்கும், பண உதவிக்கு மட்டும் விண்ணப்பிக்கும் நபர்களுக்கும் பொருந்தும். பண உதவிக்கு மட்டுமான உங்கள் விண்ணப்பத்தை கவனத்தில் கொள்ளும்போது (ஏற்கனவே நீங்கள் தங்குமிட வசதி மற்றும் பண உதவி ஆகிய இரண்டையுமே பெற்றிருப்பவராக இருந்து இப்போது பண உதவிக்கு மட்டும் மாற்றிக் கொள்ள விரும்பினால்) பின்வருபவற்றை UKBA கருத்தில் கொள்ளும்:

- வந்துசேர்ந்த மூன்று தினங்களுக்குள் நீங்கள் அடைக்கலத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளீர்களா
- உங்கள் வருகை குறித்து நீங்கள் அளித்துள்ள விவரங்கள் நம்பத்தகுந்தவைதானா.

வழக்கமாக, நீங்கள் 'இயன்றவரை நியாயமான அளவிற்கு விரைவாக' அடைக்கலத்திற்கு விண்ணப்பித்துள்ளீர்களா என்பதைப் பரிசீலிப்பதற்கு, நீங்கள் அளித்துள்ள விவரங்களையே UKBA பயன்படுத்தும். உங்களுக்கு ஆதரவு அளிக்கலாமா என்பது குறித்து UKBA-ஆல் ஒரு முடிவுக்கு வர இயலவில்லையெனில், அல்லது நீங்கள் இயன்ற அளவிற்கு விரைவாக விண்ணப்பிக்கவில்லையென்று அவர்கள் கருதினால், ஒர் நேர்காணலுக்காக உங்களை அவர்கள் கிளாஸ்கோ அல்லது லிவர்பூலுக்கு அழைப்பார்கள். கிளாஸ்கோவிக்கு பயணம் செய்வதற்கு செலவழிக்கக்கூடிய நிலையில் நீங்கள் இல்லை என்று நீங்கள் UKBA-க்குத் தெரிவித்தால், நீங்கள் தங்கியிருக்கும் பகுதியில் உள்ள மண்டல அலுவலகத்திலேயே நேர்காணலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்யக்கூடும். **உங்களுக்கு உதவி தேவை மற்றும்'இயன்றவரை**

**நியாயமான அளவிற்கு விரைவாக் அடைக்கலத்திற்கு விண்ணப்பித்திருப்பதை நீங்கள் உறுதி செய்ய விரும்பினால், இந்த நேர்காணலில் நீங்கள் பங்கேற்பது மிகவும் அவசியமாகும்.**

பின்வரும் சூழ்நிலைகள் பொருந்துமானால், UKBA உங்களுக்கு உதவுவதற்கு மறுப்பு தெரிவிப்பதற்கான வாய்ப்பில்லை:

- 18 வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகள் இருக்கும் குடும்பத்தில் நீங்கள் ஓர் உறுப்பினராக இருந்தால்;
- உங்களுக்கு விசேஷத் தேவைகள் இருந்தால், உதாரணமாக, மனவியல்ரீதியான அல்லது உடல்ரீதியான குறைபாடு உங்களுக்கு விசேஷத் தேவைகள் இருப்பின், சமூக பராமரிப்பு சட்டத்தின்கீழ், உங்கள் உள்ளூர் நிர்வாகத்தினால் உங்கள் தேவை குறித்து அளிக்கப்படும் ஒரு மதிப்பீட்டினைப் பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறுகிறிர்கள். இந்த மதிப்பீட்டுக்காக நீங்கள் வேண்டுகோள் விடுப்பதற்கு ஒரு ஆலோசனை அமைப்பு அல்லது உங்களுடைய குடும்பத்திலுள்ள ஒரு நபர் உங்களுக்கு உதவலாம்;
- மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நடைமுறை (European Convention on Human Rights)ல் குறிப்பிட்டுள்ளவாறு, நீங்கள் மனிதாபிமானமற்ற முறையில் மற்றும் அவமானத்திற்குரிய வகையில் நடத்தப்படுவதாகக் காட்டுவதற்கு இயலுமானால், அரசு உங்களுக்கு எவ்வித ஆதரவும் அளிக்காது. இது நீங்கள் அடைக்கல ஆதரவின்றி கைவிடப்பட்டவராகவும் குடியிருக்க வீடற்றவராகவும் செய்யப்பட்டிருந்தால் வழக்கமாக நிகழும். இது உங்களுக்கு பொருந்துமா என்பதை அறிந்துகொள்வதற்கு உங்களுக்கு சட்ட ஆலோசனைத் தேவைப்படலாம்.

நீங்கள் ஏற்கெனவே சட்டப்பூர்வமாக யூகேயில் இருந்து, உங்கள் சொந்த நாட்டின் சூழ்நிலைகள் மாறியுள்ள காரணத்தால், அடைக்கலத்திற்கு விண்ணப்பிப்பவராக இருப்பின், நீங்கள் இயன்றவரை விரைவான வாய்ப்பில் அடைக்கலத்திற்கு விண்ணப்பித்துள்ளீர்களா என்பதை UKBA ஆய்வு செய்யவும்.

## UKBA உதவிக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

இந்த சிற்றேட்டின் இறுதிப்பகுதியில் பட்டியலிடப்பட்டுள்ள அகதி அமைப்புகள், UKBA உதவிக்காக நீங்கள் விண்ணப்பிப்பதற்கு உதவலாம். உள்ளூர் குடிமக்கள் ஆலோசனை சேவை (Citizens Advice Service), அல்லது அகதிக் குழுக்கள் போன்ற பிற அமைப்புகளும் இவ்விஷயத்தில் உதவக்கூடும். நீங்கள் ஓர் அகற்று மையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தால், மற்றும் உங்கள் ஜாமீன் விண்ணப்பத்தில் நீங்கள் வெற்றி அடைந்திருந்தால், UKBA உதவிக்காக நீங்கள் விண்ணப்பிப்பதற்கு அகதி மையங்களில் ஒன்று உங்களுக்கு உதவக்கூடும்.

## எனக்கு தங்குமிட வசதி மற்றும் பண வசதி தேவைப்படுகிறது

தங்குமிட வசதி மற்றும் பண உதவிக்காக நீங்கள் ஒரே நேரத்தில் விண்ணப்பிக்கலாம். UKBA உதவிக்கு நீங்கள் தகுதியானவரா என்பது குறித்த முடிவுக்காக நீங்கள் காத்திருக்கும்போது, தங்குவதற்கு உங்களுக்கு இடம் எதுவுமில்லையென்றால், நீங்கள் அடைக்கலம் கோரும்போது UKBA உங்களை சேர்ப்பு மையம் அல்லது ஆரம்பக்கட்டத் தங்குமிட வசதியில் தங்க வைக்கும். ஆரம்பக்கட்ட தங்குமிட வசதியானது, குறுகிய கால அடிப்படையில் அடைக்கலம் நாடுவோர் தங்க வைக்கப்பட்டு, உணவு அல்லது பண உதவி அளிக்கப்படும் இடமாகும்.

### எனக்கு தங்குமிட வசதி அளிப்பதற்குUKBA ஒப்புதலளிக்கிறது

உதவி பெறுவதற்கு நீங்கள் தகுதியானவர் என்று UKBA முடிவு செய்தால், பெரும்பாலும் லண்டனுக்கு வெளியே மற்றும் லண்டனின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள தங்குமிட வசதி ஒன்றிற்கு அவர்கள் உங்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வார்கள். UKBA இந்த செயல்முறையை 'பரவலாக்கல்' என்று அழைக்கிறது. உங்கள் பரவலாக்கும் தங்குமிட வசதியானது சாதாரணமாக உங்கள் ஆரம்பக்கட்ட தங்குமிட வசதி இருந்த அதே பகுதியில்தான் இருக்கும். UKBA உங்களை எங்கே அனுப்ப வேண்டுமென்பதை உங்களால் முடிவு செய்ய இயலாது. ஆனால் உங்கள் உடல்ரீதியான தேவைகள் மற்றும் தனிநபர் சூழ்நிலைகளை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். UKBA தங்குமிட வசதிக்கு செல்வதற்குமுன், நீங்கள் எங்கே வாழப் போகிறீர்கள், பண உதவியை நீங்கள் எவ்வாறு பெறலாம், உங்களுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டால், உங்கள் புதிய அமைவிடத்தில் நீங்கள் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்பவை குறித்த விவரங்களை நீங்கள் பெறுவீர்கள். தங்குமிட வசதிக்காக நீங்கள் பயணம் செய்வதற்கு UKBA ஏற்பாடு செய்து உங்களுக்கு பணம் வழங்கிடும்.

### எந்த வகையான தங்குமிட வசதி எனக்குக் கிடைக்கும்?

வழக்கமாக UKBA உங்களை ஒரு பகிர்ந்து கொள்ளப்படும் வீடு அல்லது குடியிருப்பில் தங்க வைக்கும். இந்த இடங்களை நடத்திவருபவர்கள், இடத்தின் உரிமையாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் உங்களுக்கு படுக்கை மற்றும் அடிப்படை சமையலறை சாதனங்களை அளிப்பதுடன், உங்கள் பகுதியில் உள்ள சேவைகளை தொடர்பு கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் உங்களுக்கு உதவும் பொறுப்பும் உள்ளவர்கள். உள்ளூர் மருத்துவர், பள்ளிகள் மற்றும் அல்லது கல்லூரிகளை நீங்கள் அணுகுவதையும் அவர்கள் உறுதி செய்வர். உங்கள் தங்குமிட வசதி சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதும் உங்கள் தங்குமிட உரிமையாளரின் பொறுப்பாகும். உங்கள் தங்குமிட வசதி குறித்து அல்லது உள்ளூர் சேவைகளை அணுகுவது தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால், இவை குறித்து உங்கள் தங்குமிட உரிமையாளர் அல்லது உங்கள் உள்ளூர் உதவி மற்றும் ஆலோசனைச் சேவையை (One Stop Service) தொடர்பு கொள்ளவும். நீங்கள் முன்பு அறிந்திராத ஒருவருடன் பகிர்ந்து கொள்ளும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படலாம் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.

**UKBA தங்குமிட வசதியில் நான் எத்தனை காலம் தங்கியிருக்கலாம்?**

நீங்கள் வெளியே செல்வதற்கான அனுமதியை தான் வழங்கும்வரை உங்கள் தங்குமிடத்திலேயே நீங்கள் இருக்கவேண்டுமென்று UKBA எதிர்பார்க்கிறது. அனுமதியின்றி நீங்கள் உங்கள் தங்குமிடத்திலிருந்து வெளியே சென்றால், உங்களுக்கு உதவியும் தங்குமிட வசதியையும் வழங்குவதை ஒட்டுமொத்தமாக UKBA நிறுத்திவிடக்கூடும். நீங்கள் UKBA அளித்துள்ள தங்குமிட வசதியிலிருந்து வெளியேறி, வேறு யாருடனாவது தங்கியிருக்க விரும்பினால், இத்தகைய மாற்றங்கள் குறித்து UKBA-க்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். உங்கள் அடைக்கல விண்ணப்பத்தின் மீது UKBA முடிவெடுக்கும் வரை நீங்கள் அந்தத் தங்குமிடத்திலேயே தொடர்ந்து இருக்கலாம். UKBA உங்களுக்கு அனுமதி அளிக்குமானால், நீங்கள் பெற்றுவரும் UKBA ஆதரவு 28 தினங்களுக்குப்பின் முடிவுற்றுவிடும். அதாவது, நீங்கள் 28 தினங்களுக்குள் வெளியேற வேண்டுமென்பதை இது குறிக்கிறது.

**நான் முறையீட்டிற்கு முயற்சி செய்தால்UKBA எனக்கு உதவுமா?**

ஆம். உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை UKBA மறுக்குமானால், ஆனால் நீங்கள் அவர்களது கால வரையறைக்குள் முறையீடு செய்திருந்தால், உங்கள் தங்குமிடத்தில் நீங்கள் தொடர்ந்து தங்கியிருக்கலாம் மற்றும் நீங்கள் தொடர்ந்து உதவியைப் பெறுவீர்கள்.

**என்னுடைய முறையீடு மறுக்கப்பட்டுவிட்டால்UKBA என்னை ஆதரிக்குமா?**

உங்களைச் சார்ந்து வாழும் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உங்களுக்கு இல்லையெனில், உங்களுடைய முறையீடு மறுக்கப்பட்டுவிட்டாலும் கூட உங்களுக்கான ஆதரவு தொடர வேண்டும்.

உங்களைச் சார்ந்து வாழும் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உங்களுக்கு இல்லை மற்றும் முறையீடு செய்வதற்கான உரிமைகள் உங்களுக்கு இல்லையெனில், உங்கள் அடைக்கல கோரிக்கை இறுதியாக மறுக்கப்பட்டதிலிருந்து 21 நாட்கள் முடிவுற்றபின் உங்களுக்கு அளித்துவரும் உதவியை UKBA நிறுத்திவிடும்.

இருப்பினும், நீங்கள் பிரிவு 4 உதவிக்கு (Section 4 support) விண்ணப்பிக்கலாம். தயவுசெய்து அடைக்கல உதவிக்கான கூட்டமைப்பு (Asylum Support Partnership) சிற்றேட்டில், நீங்கள் 'ஏழ்மைநிலையில் மற்றும் அடைக்கல நடைமுறைகளின் இறுதிக்கட்டத்தில் இருப்பவரா?'-வை www.refugeecouncil.org.uk என்ற வலைத்தளத்தில் காணவும் அல்லது நீங்கள் ஸ்காட்லாந்தில் வாழ்பவராக இருந்தால், ஸ்காட்லாந்து அகதிக் குழு சிற்றேடான பிரிவு 4 உதவியை பார்க்கவும். உங்கள் சட்ட ஆலோசனையாளர் அல்லது உங்களுக்கு மிகவும் அருகாமையில் உள்ள அகதி மையம், விண்ணப்பம் தொடர்பாக உங்களுக்கு உதவக்கூடும்.

**எனக்கு பண உதவி மட்டுமே தேவை**

நீங்கள் தங்குவதற்கு வேறு ஏதேனும் ஓரிடம் இருக்குமானால், உதாரணமாக நண்பர்கள் மற்றும் உறவினர்கள் இருப்பார்களானால், நீங்கள் பண உதவிக்கு மட்டும் UKBAவிடம் விண்ணப்பிக்கலாம். ஒரு விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு UKBAவிற்கு பல வாரங்கள் ஆகலாம். இக்காலக்கட்டத்தில் உதவி எதுவும் வழங்கப்படமாட்டாது, மற்றும் கடந்த காலத்திற்காக பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது. உங்களுக்கு பண உதவி வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் பின்வருபவை நடைபெற வேண்டும்:

1. நீங்கள் பண உதவி பெறுவதற்கு தகுதி பெறுவதை உறுதிச்செய்யும் கடிதம் ஒன்றை UKBA உங்களுக்கு அனுப்பிவைக்கும்.
2. அவசரகால ஆதரவு டோக்கன்கள் என்றழைக்கப்படும் தற்காலிக பணச்சீட்டுகளை அவர்கள் உங்களுக்கு அளிப்பார்கள். இவை குறுகிய காலத்திற்கு மட்டுமே செல்லத்தக்கவை. இவற்றை அஞ்சலகத்திலும் நீங்கள் கொடுத்து பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
3. விண்ணப்பப் பதிவு அட்டை (Application Registration Card – ARC ) உங்களிடம் இருக்குமானால், குறிப்பிட்ட அஞ்சலகத்தில் இந்த அட்டையைக் காட்டுவதன் மூலம் நீங்கள் வழக்கமான தொகைகளை பெற்றுக் கொள்ள முடியும். தொகைகளை வழங்கும் நிறுவனமான Sodexo, எந்த அஞ்சலகத்திற்கு செல்ல வேண்டுமென்பதை உறுதிசெய்து கடிதம் ஒன்றை உங்களுக்கு அனுப்பும்.

உங்கள் பண உதவி குறித்து நீங்கள் கேள்வி கேட்க வேண்டுமென்றாலோ அல்லது நீங்கள் ஏதேனும் பிரச்சனையை எதிர்கொண்டாலோ, UKBA ஐ 0845 602 1739 என்ற உதவி எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது உங்கள் அருகாமையில் உள்ள உதவி மற்றும் ஆலோசனைச் சேவையை (One Stop Service) அணுகவும். இது பணம் மற்றும் தங்குமிட வசதி ஆகிய இரண்டையும் பெறும் நபர்களுக்கும் பொருந்தும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

**என்னுடைய டோக்கன்கள் அல்லதுARC-ஐ நான் தொலைத்துவிட்டால் என்ன நடக்கும்?**

உங்கள் டோக்கன்கள் அல்லது உங்கள் ARC-ஐ நீங்கள் தொலைத்துவிட்டாலோ, அல்லது யாராவது அதைக் களவாடிவிட்டாலோ, புதிய டோக்கன் அல்லது புதிய ARC-ஐ பெறும் பொருட்டு, இந்த இழப்பு அல்லது களவைப்பற்றி நீங்கள் காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டும். குற்றப்பதிவு எண், காவல்துறை அதிகாரியின் பெயர் மற்றும் காவல் நிலையத்தின் பெயர் ஆகியவை அடங்கிய காவல்துறை அறிக்கையின் ஒரு எழுத்துமூல ஆதாரத்தை நீங்கள் பெற வேண்டும். இந்தக் காவல்துறை அறிக்கையை UKBA-க்கு 020 8633 0653 என்ற எண்ணிற்கு அல்லது 0870 336 9233 என்ற ஸ்காட்லாந்து எண்ணில் தொலைநகல் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது உங்கள் உள்ளூர் உதவி மற்றும் ஆலோசனைச் சேவையை தொடர்பு கொள்ள வேண்டும்.

நீங்கள் தற்போது பணம் பெற்றுவரும் அஞ்சலகத்தை மாற்ற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அல்லது ARC மூலம் பணம் பெறுவதில் நீங்கள் பிரச்சனைகளை எதிர்கொண்டால்,

நீங்கள் Sodexo-ஐ தொலைபேசி உதவி எண்ணான 01276 687 099-ல் அழைத்துப் பேசவேண்டும். நீங்கள் ஆங்கிலம் பேசுபவராக இல்லாவிட்டால், அழைப்பதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் அல்லது ஒரு நண்பரின் உதவியை நீங்கள் நாட வேண்டியிருக்கும்.

**என்னுடைய சூழ்நிலைகள் மாறிவிட்டன**

உங்கள் சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதன் காரணமாக உங்களுக்கு தங்குமிட வசதியும் பண உதவியும் தேவைப்படுமானால், தங்குமிட வசதிக்காக நீங்கள் பின்னாளில் விண்ணப்பம் செய்து கொள்ளலாம். இது குறித்து உங்களுக்கு உதவக்கூடிய, உங்களுக்கு மிக அருகாமையில் இருக்கும் அகதி மையத்தை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.

## UKBA எனக்கு வேறு என்னென்ன உதவியை வழங்கும்?

**மகப்பேற்றிற்கான தொகை**

புதிதாகப் பிறந்துள்ள குழந்தைக்கான மகப்பேறு உதவித்தொகையைப் பெறுவதற்கு நீங்கள் UKBA-க்கு விண்ணப்பிக்கலாம். ஒரு முறை வழங்கப்படும் தொகையாக 300 பவுண்டுகள் டோக்கன்களாக வழங்கப்படும். குழந்தை பிறந்த இரு வாரங்களுக்கு மேல் செல்லாமல் எழுத்துமூல விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும். எதிர்பார்க்கப்படும் குழந்தை பிறப்பின் தேதிக்கான சான்று, அல்லது குழந்தையின் முழுமையான பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றையும் நீங்கள் இணைக்க வேண்டும். யூகேக்கு வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக அல்லது அதற்குக் குறைவாகப் பிறந்த குழந்தைகளும் மகப்பேறு உதவித்தொகையைப் பெறுவதற்கு தகுதி பெறுகின்றனர். பிரிவு 4 உதவியை பெறுபவர்கள் டோக்கன்களாக 250 பவுண்டுகள் மட்டுமே பெறுவார்கள் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

**கருவுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பணம் வழங்குதல்**

UKBA-விடமுருந்து உதவி பெறும் கருவுற்ற பெண்கள் மற்றும் ஒரு வயது முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகள், தங்கள் அடிப்படை UKBA தொகைகளைத் தவிர கூடுதலாக 3 பவுண்டுகள் பெறுவதற்கு தகுதி பெறுகின்றனர். ஒரு வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு வாரம் 5 பவுண்டுகள் கூடுதலாக வழங்கப்படுகிறது. இத்தொகைகள், பிரிவு 4 உதவியை பெறுபவர்களுக்கும் கிடைக்கும்.

**அடைக்கலம் மற்றும் முறையீடு நேர்காணல்களுக்காக பயணம் செய்தல்**

நீங்கள் உதவிபெறும் பட்சத்தில், உங்கள் அடைக்கலம் மற்றும் முறையீடு நேர்காணல்களுக்கான பயணச் செலவுகளை UKBA ஏற்கும். உங்கள் பயணச் செலவுகளுக்கு உதவி கோரி நீங்கள் விண்ணப்பிக்கலாம். இந்தக் கோரிக்கை தொடர்பாக உங்கள் உதவி மற்றும் ஆலோசனைச் சேவையால் (One Stop Service) உங்களுக்கு உதவ முடியும்.

# இதர விவரங்கள்

**எனக்கு உதவுவதற்கு UKBA மறுத்துவிட்டால் அல்லது எனக்கான ஆதரவை திரும்பப் பெற்றுவிடுவதாக மிரட்டினால் என்ன செய்வது?**

உங்களுக்கு உதவுவதற்கு UKBA மறுத்தால், ஓர் உதவித் தீர்ப்பாளரிடம் முறையீடு செய்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கக்கூடுமென்றாலும், உங்கள் முறையீட்டின் மீதான முடிவுக்கு நீங்கள் காத்திருக்கும் காலத்தில் உங்களுக்கு UKBA-ன் உதவி எதுவும் கிடைக்காமல் போகலாம். கோரப்பட்ட அடைக்கலத்தைக் கொண்டிருக்காதவர்கள் என்ற அடிப்படையில் 'நியாயமான நடைமுறைக்கேற்ப' ஆதரவு மறுக்கப்பட்ட அடைக்கலம் கோருபவர்கள் முறையீடு செய்வதற்கு எந்த உரிமையும் இல்லை.

எனினும் நீங்கள் ஆதரவைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் இந்த ஆதரவு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் என்று UKBA உங்களுக்கு தகவல் தெரிவித்தால், நீங்கள் முறையீடு செய்வதற்கு உரிமையைக் கொண்டிருப்பீர்கள் மற்றும் உங்களுடைய முறையீட்டுக் காலத்தில் உங்களுக்கான ஆதரவும் தொடரும்.

அடைக்கல ஆதரவு முறையீடுகள் குறித்து மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து அடைக்கல ஆதரவு முறையீடுகள் திட்டப்பணி (Asylum Support Appeals Project) உண்மை விவரத்தாள்களை www.asaproject.org.uk என்ற வலைத்தளத்தில் பார்க்கவும்.

**நான் பயணம் செய்யலாமா?**

யுனைடெட் கிங்டமிற்குள்ளாக (UK) நீங்கள் பயணம் செய்வதற்கு உங்களுக்கு சுதந்திரம் உண்டு, ஆனால் நீங்கள் UKBA தங்குமிட வசதியில் இருந்தால், வரிசையாக ஏழு பகல்கள் மற்றும் இரவுகளுக்கும் அல்லது ஆறு மாத காலத்தில் 14 பகல்கள் மற்றும் இரவுகளுக்கு மட்டும் நீங்கள் வெளியே இருக்க அனுமதிக்கப்படுகிறீர்கள். உங்கள் தங்குமிட வசதியைவிட்டு வெளியே செல்லும் எண்ணம் உங்களுக்கு இருப்பின், அது குறித்து உங்கள் தங்குமிட உரிமையாளருக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

**என்னுடைய அடைக்கல கோரிக்கையின்மீது முடிவெடுப்பதற்கு காத்திருக்கும் காலத்தில் நான் பணி செய்யலாமா?**

ஓர் அடைக்கலம் நாடுபவராகப் பொதுவாக உங்களுக்குப் பணி செய்வதற்கு அனுமதி கிடையாது. ஆனால், உங்கள் அடைக்கல விண்ணப்பத்தின் ஆரம்பக்கட்ட முடிவிற்காக நீங்கள் ஓராண்டிற்கும் மேலாக காத்திருக்கும்பட்சத்தில், நீங்கள் பணி செய்வதற்கான அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம். இதற்கு, உங்கள் வழக்கறிஞர் உங்களுக்கு உதவக்கூடும். நீங்கள் அடைக்கல செயல்முறையில் இருக்கும் வேளையில் புதிய திறன்களை கற்றுக் கொள்வதற்கான சிறந்த வழியாக உள்ள தன்னார்வப் பணிகளை நீங்கள் மேற்கொள்ளலாம். இப்பணிகள் உண்மையில் தன்னார்வத்தினாலும் மற்றும் ஊதியம் பெறாதவையாகவும் இருக்கவேண்டும். நீங்கள் தன்னார்வ

பணியை மேற்கொண்டால், பயணம் மற்றும் மதிய உணவுக்கான செலவுகளுக்கு பணம் வழங்கப்படும்.

**முக்கிய குறிப்பு:**

உங்கள் சூழ்நிலைகள் மாறுமானால், உதாரணமாக, ஒரு குடும்ப உறுப்பினர் உங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளுதல், அல்லது முகவரி மாற்றம், அல்லது மகப்பேற்றிற்கானத் தொகைக்காக விண்ணப்பிக்க விரும்புதல் ஆகியவற்றின்போது, இயலுமானால், இது நடைபெறுவதற்கு முன்பே நீங்கள் UKBAவிடம் தெரிவிக்க வேண்டும். உங்கள் சூழ்நிலைகள் எவ்வாறு மாறியுள்ளன என்பதைத் தெரிவித்து UKBA-க்கு எழுதவேண்டும். தயவுசெய்து உங்கள் கடிதத்தின் நகலொன்றை உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள். கீழே பட்டியலிடப்பட்டுள்ள, உங்களுக்கு அருகாமையிலுள்ள அகதி அமைப்பினால் உங்களுக்கு உதவ இயலும்.

## உதவி மற்றும் ஆலோசனைக்கான ஆதாரங்கள்

பல கலாச்சார ஆதார மையம் (Multi-Cultural Resource Centre)> வட இங்கிலாந்து அகதி சேவை (North of England Refugee Service)> அகதி நடவடிக்கை (Refugee Action)> அகதிக் குழு (Refugee Council)> ஸ்காட்லாந்து அகதிக் குழு (Scottish Refugee Council) மற்றும் வேல்ஸ் அகதிக் குழு (Welsh Refugee) போன்ற அகதி அமைப்புகளே அடைக்கலம் நாடுவேருக்கு உதவியும் ஆலோசனையும் வழங்கும் முக்கிய அமைப்புகளாகும். அடைக்கலம் நாடுவோர் மற்றும் அகதிகள் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். யூகேயின் பல்வேறு மண்டலங்களிலும், இந்த அமைப்புகள், தங்கள் உதவி மற்றும் ஆலோசனை சேவைகள் (One Stop Services) வாயிலாக தங்குமிட வசதி, பண உதவி, அடைக்கலம் மற்றும் உடல் நலம் குறித்த வி`யங்கள் பற்றிய ஆலோசனை மற்றும் விவரங்களை அளிக்கின்றன. இவை அரசு சாராத தனி அமைப்புகளாகும். இந்த அமைப்புகளின் ஊழியர்கள் உங்களுக்கு பயனளிக்கக்கூடிய ஆலோசனைகளை வழங்குவார்கள். ஆனால், அரசுத் துறைகள் உங்கள் வி`யத்தில் எடுத்துள்ள முடிவுகளை பொதுவாக இவர்களால் மாற்ற முடியாது என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள். மற்ற அமைப்புகளான, குடிமக்கள் ஆலோசனை சேவை, அகதிக் குழுக்களுக்கான உள்ளூர் ஆலோசனை போன்றவையும் இலவச ஆலோசனை மற்றும் தகவல்களை அளிக்கக்கூடும்.

**Multi-Cultural Resource Centre (Northern Ireland)**
Tel: 02890 238 645
www.mcrc-ni.org

**North of England Refugee Service Head Office (North East)**
Tel: 0191 245 7311
www.refugee.org.uk

**Refugee Action Head Office (East Midland, North West, South Central, South West)**
Tel: 020 7654 7700
www.refugee-action.org.uk

**Refugee Council Head Office (London, East of England, Yorkshire & Humberside, West Midlands)**
Free advice line: 0808 808 2255
Tel: 020 7346 6700
www.refugeecouncil.org.uk

**Scottish Refugee Council**
Tel: 0141 248 9799
Freephone: 0800 085 6087
www.scottishrefugeecouncil.org.uk

**Welsh Refugee Council**
Tel: 02920 489 800
www.welshrefugeecouncil.org

Asylum Support Partnership consists of:
North of England Refugee Service, charity number: 1091200 www.refugee.org.uk
Refugee Action, charity number: 283660 www.refugee-action.org.uk
Refugee Council, charity number: 1014576 www.refugeecouncil.org.uk
Scottish Refugee Council, charity number: SC008639 www.scottishrefugeecouncil.org.uk
Welsh Refugee Council, charity number: 1102449 www.welshrefugeecouncil.org